# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, சென்னை –600 032.
தொலைபேசி: 044–22201337/நிகரி எண்.22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).

* * * * * * * * * * * * *

முறையீட்டு மனு எண்: 1042/2016/பேரு

ஆணை எண்: 157/2017

நாள்: 19/06/2017

திரு. D. வீரமுத்து,
71-A, வடக்கு ரத வீதி,
பெண்ணாடம் (அஞ்சல்),
திட்டக்குடி வட்டம், கடலூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
பெண்ணாடம் பேரூராட்சி,
பெண்ணாடம், கடலூர் மாவட்டம். – எதிர் மனுதாரர்

கடலூர் மாவட்டம், 71-A, வடக்குரத வீதி, பெண்ணாடம் என்ற முகவரியில் வசிக்கும் திரு. D. வீரமுத்து, அவரது 18.10.2016 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 20.10.2016 அன்று பெறப்பட்டு 1042/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு உரிய ஆவணங்கள் மற்றும் வாக்குமூலங்களின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கடலூர் மாவட்டம், பெண்ணாடம் **பேரூராட்சியைச்** சேர்ந்த திரு. D. வீரமுத்து என்பவர் தனது 18.10.2016 நாளிட்ட முறையீட்டு **மனுவில் தான்** ரீ.ச. எண்.497/9-ல் கிரயம் பெற்று அனுபவித்த இடத்தினை ஆக்கிரமிப்பு செய்து திரு. கலியமூர்த்தி, அவர் மனைவி பானுமதி ஆகியோர் பேரூராட்சி கட்டிட வரைபட அனுமதியை மீறி வீடு கட்டி வருவதாகவும், இது

தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு எண்.64/2015ல் தமக்கு சாதகமாக தீர்வு வந்துள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேலும் பட்டா வழங்கப்படாத மனைக்கு வீடு கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், தரை தளம் கட்டுவதற்கு மட்டும் அனுமதி பெற்று முதல், இரண்டாம் தளம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக செயல் அலுவலரிடமும், அலுவலக பணியாளர் திரு. கண்ணனிடமும் பலமுறை முறையிட்டும் அந்த ஆக்கிரமிப்பு நிறுத்தப்படவில்லை. அனுமதியின்றி முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் கட்டியதை தடுக்கத் தவறிய செயல் அலுவலர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும், நடவடிக்கை எடுத்து தனது இடத்தை மீட்டுத் தருமாறு கோரியுள்ளார்.

3.11.2016 நாளிட்ட முறைமன்ற நடுவ அறிவிப்பாணையின் வாயிலாக மனுதாரரின் முறையீட்டு மனு மீது செயல் அலுவலரின் விளக்க அறிக்கை கோரப்பட்டு, பெறப்பட்டது. பெண்ணாடம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. அ. ஜோதிமாணிக்கம் என்பவர் தனது அறிக்கையில் கீழ்க்கண்ட விவரங்களை சமர்ப்பித்துள்ளார்:-

இப்பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கட்டப்படும் கட்டிடங்களுக்கு கட்டிட அனுமதி கோரி வரப்பெறும் மனுக்களில் பட்டா அல்லது பத்திர நகல் உள்ளவற்றிற்கு மட்டுமே கட்டிட அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. மேலும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளபடி 497/9 என்பது நத்தம் இல்லை. அந்த இடம் புண்ணியகோடி மற்றும் சங்கர் என்பவர்களுக்குச் சொந்தமானது ஆகும். விருத்தாசலம் கோர்ட்டில் இருந்து இவ்வலுவலகத்திற்கு நோட்டீஸ் எதுவும் வரப்படவில்லை மனுதாரர் தெரிவித்துள்ளபடி மேற்படி சர்வே எண்ணில் திரு. கலியமூர்த்தி – திருமதி. பானுமதி என்பவர்களுக்கு தரை தளம் மட்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது உண்மை. மேலும், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளத்திற்கு அனுமதி கோரி மேற்படி நபர்கள் இவ்வலுவலகத்திற்கு விண்ணப்பம் அளித்துள்ளனர். அவ்விண்ணப்பம் இவ்வலுவலக ஆய்வில் உள்ளது. மேலும், சில ஆவணங்களை சமர்ப்பித்திட கோரி மேற்படி நபர்களுக்கு கடிதம் வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர் தெரிவித்துள்ளவாறு முதல் தளத்திற்கு கட்டிட அனுமதி வழங்கப்படவில்லை என்பது உண்மைதான். தரை தளம் மற்றும் முதல் தளம் கட்டி வரும் திரு. கலியமூர்த்தி – திருமதி. பானுமதி என்பவர்களுக்கு கட்டிட அனுமதி பெற்ற பிறகு கட்டிடப் பணியினை தொடங்குங்கள் என இவ்வலுவலகம் மூலம் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதற்கு மனுதாரர்கள் பதிலும் அனுப்பி வைத்துள்ளார்கள். மேலும் மனுதாரர் தெரிவித்துள்ளவாறு விருத்தாசலம் மாவட்ட கூடுதல் சார்பு நீதிமன்றம் திரு. கலியமூர்த்தி என்பவர் இடைக்கால உறுத்துக் கட்டளை கோரி

தொடர்ந்த மனுவினை தள்ளுபடி செய்தது உண்மைதான். மேற்கண்ட பதில்கள் யாவும் இவ்வலுவலக ஆவணங்களை ஆய்வு செய்து வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

மனுதாரரின் குற்றச்சாட்டு சம்பந்தமாக நேரடியாக விசாரிக்கும் பொருட்டு 23.2.2017 அன்று விசாரணைக்கு ஆஜராகி விளக்கமளிக்குமாறு மனுதாரருக்கு ஆணையிடப்பட்டது. அதன்படி மனுதாரர் 23.2.2017 அன்று விசாரணைக்கு ஆஜராகி தனது வாக்குமூலத்தில் கீழ்க்கண்ட விவரங்களை தெரிவித்துள்ளார்:-

> 18.10.2016 நாளிட்ட முறையீட்டு மனு என்னால் நான் உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. எனது பக்கத்து நிலத்தில் திரு.கலியமூர்த்தி அவருடைய மனைவி திருமதி. பானுமதி கட்டிட வரைபட அனுமதி மீறி கட்டிடம் கட்டியுள்ளார்கள். 'தரைதளத்திற்கு மட்டும் கட்டிட அனுமதி பேரூராட்சியிடம் பெற்று தற்பொழுது முதல் தளம் மற்றும் 2ம் தளம் கட்டியுள்ளார். நான் இந்த விஷயத்தை செயல் அலுவலரிடம் கூறியும், பேரூராட்சியில் நான் செயல் அலுவலருக்கு மனுக்கள் கொடுத்தும் ஒன்றும் நடைபெறவில்லை. அந்த அலுவலகத்தில் வேலை செய்யும் திரு. கண்ணன் என்பவரிடம் சொல்லியும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது குறித்து மாவட்ட ஆட்சி தலைவரிடம் தலைமை செயலர், இயக்குநர், செயலாளர் இவர்களுக்கு மனுக்கள் அனுப்பினேன். நான் செயல் அலுவலரிடம் தகவல் அறியும் உரிமை சட்டத்தில் இது குறித்து கேள்வி கேட்டதற்கு வருவாய் துறை மூலம் விவரங்கள் பெற்று உரிமம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். அனுமதி பெறாமல் கட்டிடம் கட்டினால் விதிகள் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்கள். ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. கடலூர் நீதிமன்றத்தில் திரு. கலியமூர்த்தி அவருடைய மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும் 19 அடி அகலம், 50 அடி நீளத்தில் எனது இடத்தில் அவர் வீடு கட்டியுள்ளார். நில உரிமம் எனக்கு தான் உள்ளது. ஆனால் உரிமையாளர்களை பார்க்காமல் பேரூராட்சி நிர்வாகம் அவர் கட்டிடம் கட்ட அனுமதி வழங்கியுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் குற்றச்சாட்டுகள் சம்பந்தமாக நேரடியாக விசாரிக்கும் பொருட்டு 27.2.2017 அன்று நடைபெற்ற விசாரணைக்கு செயல் அலுவலர் திரு. A. ஜோதி மாணிக்கம் என்பவர் அழைக்கப்பட்டார். செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்:-

நான் 6 மாதத்திற்கு முன்பே பெண்ணாடம் பேரூராட்சியில் செயல் அலுவலராக பணியாற்றி வருகிறேன். திரு. வீரமுத்து என்பவருடைய மனு விவரம் எனக்கு தெரியும். இது குறித்து 14.11.2016ல் ஒரு அறிக்கையை சமர்ப்பித்துள்ளேன். இந்த குறிப்பிட்ட மனுவில் குறிப்பிட்ட கட்டிடத்திற்கு கட்டிட அனுமதியை வழங்கியவர் திரு. ராம்குமார் அவர் தற்பொழுது காட்டுமன்னார்குடியில் செயல் அலுவலராக பணியாற்றி வருகிறார். நான் பணியில் சேர்ந்த பிறகு அந்த இடத்தை அளவு செய்யப்பட்டது. கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நில அளவையரால் அளவு செய்யப்பட்டது. இது ஒரு கிராம நத்தம் என குறிப்பிட்டுள்ளார். நான் வந்த பொழுது முதல் தளம், இரண்டாம் தளம் எதற்கும் அனுமதி வழங்கவில்லை. எனக்கு முன்பு திரு. அருள்குமார் என்பவர் 8 மாதங்கள் பணியில் இருந்தார். அவர் தற்பொழுது மங்களம்பேட்டை பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிகிறார். திரு. கலிய மூர்த்தி என்பவர் தடையாணை வாங்கியுள்ளார். நான் கட்டிடத்தை இடிப்பதற்கு அறிவிப்பு கொடுத்துள்ளேன். கட்டிடம் கட்டும் பொழுது கட்டிடம் அனுமதி பேரூராட்சி வழங்கிய கட்டிட வரைபட நகலை இத்துடன் சமர்ப்பிக்கிறேன். அதில் தரைதளத்தில் 1918 ச.அ. கட்டியுள்ளார். 6.2.2014ல் அனுமதி வழங்கியுள்ளது அதற்கு மேல் முதல் தளம் இரண்டாம் தளம் கட்டியுள்ளார். மேலும் 1916 சதுர அடி அனுமதியின்றி முறைகேடாக கட்டியுள்ளார் என்று தெரிவித்தார்.

முறையீட்டு மனுதாரரின் குற்றச்சாட்டுகள் குறித்து நேரடியாக விசாரிக்கும் பொருட்டு 13.4.2017 அன்று நடைபெற்ற விசாரணைக்கு காட்டுமன்னார் கோயில் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. ராம்குமார் என்பவர் அழைக்கப்பட்டார். செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்.

"நான் பெண்ணாடம் பேரூராட்சியில் 2011 மே மாதம் முதல் 2014 மார்ச் வரை நான் பணியில் இருந்தேன். திரு. வீரமுத்து என்பவருடைய மனு விவரம் எனக்கு தெரியும். மனுவில் குறிப்பிட்ட திரு. கணபதி மகன் திரு. கலியமூர்த்தி அவர் மனைவி திருமதி. பானுமதி ஆகியோர் கட்டிடம் கட்டுவதற்கு வரைபட அனுமதி என்னால் 6.2.2014ல் வழங்கப்பட்டது. நான் கட்டிட அனுமதி வழங்கும் பொழுது கிரயப் பத்திரம், மதிப்பீடு, வரைபடம், கிரயப் பத்திரத்திற்கு 23.12.2012ல் கிரயம்

பெற்றுள்ளதால் விலக்கு சான்று பெறப்படவில்லை. நேரடி ஆவணங்களை பரிசீலனை செய்து என்னால் கட்டிட அனுமதி வழங்கப்பட்டது. நான் 6.2.2014ல் கட்டிட அனுமதி அளித்துவிட்டு, 5.3.2014ல் காட்டு மன்னார்கோயில் பேரூராட்சிக்கு பணி மாறுதலில் சென்றுவிட்டேன்" என்று தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் குற்றச்சாட்டுகள் சம்பந்தமாக நேரடியாக விசாரிக்கும் பொருட்டு 13.4.2017 அன்று நடைபெற்ற விசாரணைக்கு மங்களம்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் திரு. அருள்குமார் அழைக்கப்பட்டார். செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்.

"மங்களம் பேட்டை பேரூராட்சியின் செயல் அலுவலராகிய நான் 22.1.2016 முதல் 5.9.2016 வரை கூடுதல் பொறுப்பாக பெண்ணாடம் பேரூராட்சியில் செயல் அலுவலராக பணி புரிந்திருந்தேன். திரு. விருமுத்து என்பவருடைய மனு விவரங்களை அலுவலக கோப்புகளை பார்த்து தெரிந்து கொண்டேன். திரு. விருமுத்து என்பவர் தனது வழக்கில் திரு. கலியமூர்த்தி என்பவர் தனது நிலத்தில் கட்டிடம் கட்டியுள்ளார் எனவும் அந்த கட்டிடத்திற்கு தரைதளத்திற்கு அனுமதி பெற்று கூடுதலாக முதல் மற்றும் இரண்டாம் தளம் கட்டியுள்ளார் என கூறியுள்ளார். அவர் தொடர்ந்து இது குறித்து புகார் மனுக்கள் அளித்துக்கொண்டிருக்கிறார் என்பதை அலுவலக கோப்புகளை கொண்டு அறிய முடிகிறது. முன்னாள் செயல் அலுவலர் திரு. சுந்தரமூர்த்தி (தற்பொழுது கங்கைகொண்டான் பேரூராட்சி செயல் அலுவலர்) அவர்கள் திரு. விருமுத்து புகார் மனு மீது நடவடிக்கை மேற்கொண்டு நில அளவை துறைக்கு புகார் மனுவில் குறிப்பிட்டிருந்த சொத்தினை நில அளவை செய்து கொடுக்குமாறு வட்டாட்சியருக்கு கடிதம் எழுதியுள்ளார். இந்த கடிதத்தின் அடிப்படையில் நில அளவை மேற்கொள்ளப்பட்டது. நில அளவையின் பொழுது கிராம நிர்வாக அலுவலர், காவல் துறையினர் ஆகியோர் உடன் இருந்தனர். அப்பொழுது பெண்ணாடம் பேரூராட்சியின் இள நிலை உதவியாளர் திரு. கிருஷ்ணமூர்த்தி என்பவர் உடன் இருந்து நில அளவை குறித்து செயல் அலுவலருக்கு கடிதம் சமர்ப்பித்துள்ளார். கடிதத்தில் நாள் விவரம் இல்லை. இக்கடிதத்தில்

சம்பந்தப்பட்ட கட்டிடம் திரு. கலியமூர்த்தி, திருமதி பானுமதி என்பவருக்கு சொந்தமான இடத்தில் கட்டப்பட்டுள்ளதாக கூறியுள்ளார். எனினும் மனுதாரர் திரு. விருமுத்து என்பவர் பட்டா வழங்கியதே தவறு எனக் கூறி வருவாய் துறையில் விசாரணை மேற்கொள்ளவேண்டும் என புகார் கொடுத்துள்ளார். திரு. கலியமூர்த்தி என்பவர் தரை தளத்தில் மாறுதல் மேற்கொண்டு மேலும் முதல் தள அனுமதி கோரி 23.10.2014ல் மனு செய்திருந்தார். மேற்படி நிகழ்வுகளின் காரணமாக அனுமதி அளிக்கப்படவில்லை எனினும் மேற்படி மனுதாரர் கட்டுமான பணிகளை முடித்துவிட்டதாக தெரிகிறது. எனவே, கட்டிட பணிகளை உடனே நிறுத்தி மாற்று வரைபடம் சமர்ப்பிக்க வலியுறுத்தி அப்போதைய செயல் அலுவலர் திரு. பாலசுப்பிரமணி அவர்கள் 22.5.2014ல் அறிவிப்பு செய்துள்ளார். மேலும் 2014 ஆண்டு முதல் இது நாள் வரை நீண்ட காலமாக தொடர்ச்சியாக செயல் அலுவலர் பணியாற்ற முடியாத சூழ்நிலை நிலவுகிறது. தற்பொழுது ஸ்ரீ முஷ்ணம் பேரூராட்சியின் செயல் அலுவலர் திரு. சிவகுமார் அவர்கள் கூடுதல் பொறுப்பாக பெண்ணாடம் பேரூராட்சியில் பணி புரிந்து வருகிறார் என்று தெரிவித்துள்ளார்.

மேலும் முறையிட்டு மனுதாரரின் புகார்கள் சம்பந்தமாக நேரடியாக விசாரிக்கும் பொருட்டு 24.5.2017 அன்று நடைபெற்ற விசாரணைக்கு பெண்ணாடம் பேரூராட்சி இளநிலை உதவியாளர் திரு. கோ. கிருஷ்ணமூர்த்தி விசாரணைக்கு அழைக்கப்பட்டார். பேரூராட்சி இளநிலை உதவியாளர் தனது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளார்.

"கடந்த 2 ஆண்டு காலமாக பெண்ணாடம் பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிகின்றேன். அதற்கு முன்பு பதிவறை எழுத்தாளராக திட்டக்குடியில் மற்றும் மங்கலம் பேட்டையில் இருந்தேன். கங்கைகொண்டானில் இளநிலை உதவியாளராக பதவி வகித்தேன்.

மனுதாரர் திரு.விருமுத்தை பார்த்து இருக்கிறேன். திரு. விருமுத்து மினி பவர் பம்ப் பராமரிப்பு பணிகளை செய்வார். எனவே எங்கள் அலுவலகத்திற்கு வருவார். திரு. கலியமூர்த்தி மற்றும் திருமதி. பானுமதி அவர்கள் திரு. விருமுத்து அவர்கள் இடத்தையும் ஆக்கிரமித்து கட்டிடம் கட்டியுள்ளார்கள் என குறிப்பிடுவார். கடந்த 1 ஆண்டுகாலமாக

பேரூராட்சியில் நிரந்தர செயல் அலுவலர்கள் இல்லை. தொரப்பாடி பேரூராட்சியின் செயல் அலுவலரை இங்கு கூடுதல் பொறுப்பில் அமர்த்தியுள்ளார்கள். நிரந்தர செயல் அலுவலர் இல்லாததால் திரு. வீரமுத்து அவர்கள் குறைகளை என்னிடம் கூறுவார். மற்ற பொது மக்கள் தங்களது குறைகளையும் என்னிடம் சொல்லுவார்கள்.

திரு. கலியமூர்த்தி என்பவர் 6.2.2014ல் பேரூராட்சியில் கட்டிடம் கட்ட அனுமதி வழங்கியுள்ளார்கள். நாங்கள் அனுமதி வழங்கியதில் இருந்து 3 ஆண்டு காலத்திற்குள் கட்டிடம் கட்ட அனுமதி உள்ளது. கடந்த 5.2.2017 அன்றோடு பேரூராட்சியின் அனுமதிக்கப்பட்ட அங்கீகாரம் அனுமதி முடிவு பெறுகிறது. 2014ஆம் ஆண்டு முடிவதற்குள் கட்டிட பணிகளை முடித்துவிட்டார். மே மாதம் 2015ல் நான் இந்த அலுவலகத்திற்கு நான் பணி புரிய வருவதற்கு முன்பே கட்டிடம் அங்கீகாரம் வழங்கப்பட்டுவிட்டது. நான் பணியில் சேர்ந்த பின்பு சுமார் 10 முறை தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் இது விஷயமாக பதில் கேட்டார். நானும் பதில் அளிப்பேன். இந்த புகாரின் அடிப்படையில் வட்டாட்சியருக்கு கடிதம் எழுதி நிலத்தை அளந்து, எல்லையை பிரித்து கொடுக்குமாறு கேட்டிருந்தோம். கிராம நிர்வாக அலுவலர் காவல் துறை முன்பு இதை அளந்து சரிபார்த்த பொழுது நாங்களும் அங்கிருந்தோம். அவர்கள் நில அளவை செய்து நான்கு எல்லை குறித்து கொடுத்ததில் எங்கள் அலுவலகத்தில் அங்கீகாரம் கொடுத்த அளவு சரியாக தான் இருந்தது. நில அளவை செய்த போது திரு. வீரமுத்துவும் உடன் இருந்தார். வழக்கறிஞர் மூலம் சொத்து சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து இடைக்கால தடையாணை பெற்றுள்ளதாக குறிப்பிட்டிருந்தார். நாங்கள் நீதிமன்ற ஆணையை அவர்களிடம் கேட்டு பெறவில்லை. திரு. கலியமூர்த்தி மற்றும் திருமதி பானுமதி எங்களிடம் நீதிமன்ற ஆணை வழங்கவில்லை. கட்டிடம் கட்ட அங்கீரம் வழங்கும் பொழுது பத்திர நகல், வில்லங்க சான்று, மதிப்பீடு சம்பந்தப்பட்ட கட்டிடத்தின் வரைபடம் ஆகியவை கேட்போம். வரைபடத்தில் அனுமதி வாங்கியது போன்று கட்டாமல் அவர்களது எல்லைக்குள் கட்டிட அனுமதியில் சில மாறுதல்கள் செய்து கட்டியுள்ளார்கள். 2014 ஆம் ஆண்டு அப்பொழுது இருந்த செயல் அலுவலர் அங்கீகாரத்தில் இல்லாத மாறுதல் செய்து கட்டிடம் கட்டுவதை நிறுத்துமாறும் கட்டிட வரைபடத்தில் உள்ளவாறு கட்டுமாறும் அறிவிப்பு அனுப்பினார். அதற்கு பின்பு அவர்கள் வேறொரு திருத்திய வரைபடம் கொடுத்தார்கள். திரு. வீரமுத்து அவர்கள் ஆட்சேபனை செய்ததால் வருவாய் துறையிடம் உரிய சான்று பெற்று சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தினோம். ஆனால் இதுவரை அந்த சான்றை சமர்ப்பிக்கவில்லை. அதற்கு பிறகு அவர்கள் உரிய பதில்கள் தராவிட்டாலும் கூட சம்பந்தப்பட்டவர்களை நாங்கள் அதற்கு பின்பு தொந்தரவு

*செய்யவில்லை. மேலும் திரு. விருத்து மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் என்ன ஆணை பெற்றார் என்ற விவரம் எனக்கு தெரியாது. திரு. கலியமூர்த்தி மற்றும் திருமதி பானுமதி இருவரும் கட்டிடம் கட்ட அனுமதி கோரியபொழுது அவர்கள் பெயருக்கான பட்டா சமர்ப்பிக்கவில்லை அதற்கு பிறகு ஆறுமுகம் மக்கள் திரு. புண்ணியகோடி மற்றும் திரு. சங்கர் ஆகிய இருவருக்கும் பட்டா கிடைத்துவிட்டது ஆனால் திரு. கலியமூர்த்தி பெயரிலோ திருமதி பானுமதி பெயரிலோ பட்டா இல்லை. கட்டிட அனுமதி கோரிய போது பத்திர ஆவண நகல்கள் மட்டும் சமர்ப்பித்தார்கள். பட்டா சமர்ப்பிக்கவில்லை. தற்பொழுது ஒரு பட்டா சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆறுமுகம் மக்கள் என குறிப்பிட்டு திரு. புண்ணியகோடி மற்றும் திரு. சங்கர் என்பவர்கள் பெயரில் பட்டா சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நிலம் அளந்த போது மட்டும் நான் சென்று பார்த்தேன் அதற்கு முன்போ, பின்போ நான் கட்டிடத்தை பார்க்கவில்லை. அனுமதி இல்லாமல் கட்டிடம் கட்டுவது குறித்து இரண்டு, மூன்று தடவைகள் அவர்களுக்கு கடிதம் அனுப்பினேன். கட்டிட அனுமதி தரைதளத்திற்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. ஆனால் முதல் தளம், இரண்டாம் தளம் ஆகியவைகளுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. ஏற்கனவே இந்த இடத்தில் முதல் தளம், இரண்டாம் தளம் கட்ட அங்கீகாரம் கோரி விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார்கள். உரிய ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு நாங்கள் அவரிடம் சொல்லி திரும்ப அனுப்பிவிட்டோம்."* என்று தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் வாக்குமூலம் பெண்ணாடம் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம், பேரூராட்சி இளநிலை உதவியாளர், திரு. கிருஷ்ணமூர்த்தியின் வாக்குமூலம், காட்டுமன்னார் கோவில் பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம், மங்கலம்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் ஆகியவைகள் பரிசீலிக்கப்பட்டன. இந்நேர்வில் தரை தளத்தில் மட்டும் கட்டிடம் கட்ட அனுமதி பெற்று, அனுமதி இல்லாமல் முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் கட்டி முடிக்கப்பட்டுள்ளன என்பது உறுதியாகிறது. அனுமதியின்றி முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் கட்டி முடிக்கும் வரையில் பேரூராட்சி பணியாளர்/செயல் அலுவலர்கள் யாரும் ஆய்வு செய்யாமல் இருந்துள்ளனர். இந்நேர்வில், மேற்படி விதிகளை மீறி கட்டப்பட்ட கட்டிடங்கள் மீது உரிய சட்ட விதியின் கீழ் நடவடிக்கையை விரைந்து முடித்து இரண்டு மாதங்களுக்குள் எடுக்கப்பட்ட

நடவடிக்கைகள் குறித்த விவர அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்குமாறு பேரூராட்சியின் உதவி இயக்குநர் அவர்களை அறிவுறுத்தலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 19-ஆம் நாள் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//-

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்,

**பெறுநர்**

1. திரு. D. வீரமுத்து,
   71-A, வடக்கு ரத வீதி,
   பெண்ணாடம் (அஞ்சல்),
   திட்டக்குடி வட்டம், கடலூர் மாவட்டம்.

2. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
   கடலூர் மண்டலம், கடலூர்.

3. செயல் அலுவலர்,
   பெண்ணாடம் பேரூராட்சி,
   பெண்ணாடம், கடலூர் மாவட்டம்.